செ.வெ.எண்: 703 30.10.2007

<u>செய்தி குறிப்பு</u>

வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் பொதுமக்களுக்கு பழகுநர் ஓட்டுநர் உரிமம், ஓட்டுநர் உரிமம், நடத்துநர் உரிமம் தொடர்பான பணிகள், வாகன பதிவு மற்றும் பெயர் மாற்றம், போக்குவரத்து வாகனங்களுக்கு அனுமதி வழங்குதல், தகுதிச்சான்று வழங்குதல் போன்ற பணிகள் செய்து தரப்படுகின்றன.

மேற்படி பணிகளுக்கு மோட்டார் வாகன சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள படிவங்களில் மனுதாரர் மனு சமர்ப்பிக்க வேண்டும். முன்னதாக இப்படிவங்கள் அந்தந்த வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் இருப்பில் வைக்கப்பட்டு பொதுமக்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்பட்டு வந்தது. அதன் பின்னர், இப்படிவங்களை விற்பனை செய்ய அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் நியமிக்கப்பட்டனர். அவர்கள் மூலமும் படிவங்கள் விற்பனை செய்யப்பட்டு வந்துள்ளது.

இந்நிலையில், பொதுமக்கள் நேரடியாக வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களை அணுகி இலவசமாக படிவங்கள் வழங்கக் கோரும்போது படிவங்கள் இருப்பில் இல்லாததால் வழங்க இயலவில்லை என்று தெரிவிக்கப்பட்டதாகப் புகார் எழுந்தது.

எனவே, பொதுமக்களுக்கு படிவங்கள் தங்குதடையின்றி இலவசமாகக் கிடைக்க ஆவன செய்யும் பொருட்டு பின்வரும் பட்டியலில் காணும் 10 வகையான நிலைப்படுத்தப்பட்ட படிவங்களை உடனடியாக அச்சிட்டு வழங்க எழுதுபொருள் அச்சுத்துறைக்கு அரசு ஆணைப்பிறப்பித்தது.

| | |
|---|---|
| 1. படிவம் 1-A | மருத்துவச்சான்று |
| 2. படிவம் 2 | ஓட்டுநர் பழகுநர் உரிமம் மனு |
| 3. படிவம் 4 | புதிய ஓட்டுநர் உரிமம் கோரும் மனு |
| 4. படிவம் 9 | ஓட்டுநர் உரிமம் புதுப்பித்தல் மனு |
| 5. படிவம் 29 | வாகன உரிமை மாற்ற அறிவிப்பு |
| 6. படிவம் 30 | வாகன உரிமை மாற்ற மனு |
| 7. படிவம் 34 | வாகன தவணைக் கொள்முதல் ஒப்பந்த மனு |
| 8. படிவம் 35 | வாகன தவணைக் கொள்முதல் ரத்து மனு |
| 9. படிவம் CFA | வாகன தகுதிச்சான்று புதுப்பித்தல் மனு |
| 10. படிவம் LTVA | போக்குவரத்து வாகனம் ஓட்ட மேற்குறிப்பு பெற மனு (பேட்ஜ்) |

இதனடிப்படையில், பழகுநர் உரிமம், புதிய ஓட்டுநர் உரிமம், தகுதிச்சான்று பெறுதல், தவணைக் கொள்முதல் ரத்து, தவணைக் கொள்முதல் ஒப்பந்தம், வாகன உரிமை மாற்றம் ஆகிய பணிகளுக்கான விண்ணப்ப படிவங்களைத் தேவையான அளவு அச்சிட்டு அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் மேற்படி படிவங்களை <u>இலவசமாகப் பெற்று பயனடையலாம்</u> எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், http:-tn.gov.in/sta என்ற இணையதளமுகவரியில் மேற்படி படிவங்கள் உள்ளதை டவுன்லோட் செய்துகொள்ளலாம் என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
தலைமைச் செயலகம், சென்னை -9.